محمد صلى الله عليه وسلم

وَمَا أَرْسَلْنَاكَ إِلَّا رَحْمَةً لِّلْعَالَمِينَ

(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம்
ஓர் அருட் கொடையாகவேயன்றி அனுப்பவில்லை.

அல்குர்ஆன் 21:107

هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

அல்கோபர் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

1

இறைத்தூதர் (ﷺ) அவர்கள் மக்களிலேயே அழகிய முகம் உடையவர்களாகவும் அழகிய உருவ அமைப்பு உடையவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் வெளிப்படையாகத் தெரியும் அளவிற்கு உயரமானவர்களாகவும் இல்லை. குட்டையானவர்களாகவும் இல்லை.

அறிவிப்பாளர்: பரா஀ இப்னு ஆஸிப் (ரலி) அவர்கள்,புகாரி 3549

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம் 2

இறைத்தூதர் (ﷺ) அவர்கள் மக்களிலேயே அதிகமாகக் கொடை வழங்குபவர்களாக இருந்தார்கள்.

ஜிப்ரீல்(அலை) அவர்கள் ரமளான் மாதத்தில் தம்மைச் சந்திக்கிற வேளையில் அவர்கள் இன்னும் அதிகமாக வாரி வழங்குபவர்களாக மாறிவிடுவார்கள்.

ஜிப்ரீல்(அலை) அவர்கள் ரமளானின் ஒவ்வொரு இரவிலும் நபி(ஸல்) அவர்களைச் சந்தித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது (அது வரை அருளப்பட்ட) குர்ஆனை ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி(ஸல்) அவர்களுக்கு நினைவுபடுத்துவார்கள். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தொடர்ந்து வீசும் (மழைக்) காற்றை விட அதிகமாக நல்லதை வாரி வழங்குபவர்களாக இருந்தார்கள்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள்,புகாரி 3549

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

3

(ஒருமுறை) இறைத்தூதர் (ﷺ) அவர்கள் என்னிடம் (பரவசத்தால்) அவர்களின் முகத்தின் (நெற்றி) ரேகைகள் மின்ன வந்தார்கள். அப்போது அவர்கள், "முத்லிஜீ (என்னும், இருவரின் சாயலை வைத்து உறவு முறையை கணிப்பவர்) ஸைதைப் பற்றியும், அவரது மகன் உஸாமாவை பற்றியும் என்ன கூறினார் " என்று நீ கேள்விப்படவில்லையா? (போர்வையின் கீழிருந்து வெளிப்பட்ட) அவ்விருவரின் கால்களையும் அவர் பார்த்து விட்டு, "இந்தக் கால்கள் ஒன்று மற்றொன்றிலிருந்து தோன்றியவை' என்று கூறினார்' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள்,புகாரி 3555

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

4

நபி (ﷺ) அவர்கள் மக்களிலேயே அழகானவர்களாகவும், மக்களிலேயே வீரமிக்கவர்களாகவும் மக்களிலேயே தாராள மனமுடையவர்களாகவும் இருந்தார்கள்.

(ஒரு முறை, மதீனாவின் மீது பகைவர்கள் படையெடுத்து வருகிறார்கள் என்று வதந்தி பரவவே) மதீனாவாசிகள் பீதிக்குள்ளானார்கள். அப்போது அவர்களை நபி(ஸல்) அவர்கள் முந்திச் சென்று, குதிரையில் ஏறி (மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் எதிரியை எதிர்கொள்ளப்) புறப்பட்டார்கள். மேலும், 'இந்தக் குதிரையைத் தங்கு தடையின்றி வேகமாக ஓடக் கூடியதாகக் கண்டேன்' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,புகாரி 2820

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

5

கஅப் இப்னு மாலிக்(ரலி), தபூக் போரில் கலந்து கொள்ளாமல் பின்தங்கிவிட்ட சமயத்தை (நினைவு கூர்ந்து) பேசிய படி, 'நான் அல்லாஹ்வின் தூதருக்கு சலாம் சொன்னேன். அவர்களின் (பொன்னிற) முகம் மகிழ்ச்சியால் மின்னிக் கொண்டிருந்தது.

இறைத்தூதர் (ﷺ) மகிழ்ச்சியடைந்தால் அவர்களின் முகம் சந்திரனின் ஒரு துண்டைப் போல் பிரகாசமாகிவிடும். நாங்கள் அதை வைத்து அவர்கள் மகிழ்ச்சியடைந்திருப்பதைத் தெரிந்து கொள்வோம்' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: கஅப் இப்னு மாலிக்(ரலி) அவர்கள்,புகாரி 3556

நபி(ﷺ) அவர்கள் இயற்கையாகவோ, செயற்கையாகவோ கெட்ட வார்த்தை பேசுபவர்களாக இருந்ததில்லை. 'உங்களில் சிறந்தவர் உங்களில் நற்குணமுடையவரே' என்று அவர்கள் கூறுவார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள், புகாரி 3556

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

7

இரண்டு விஷயங்களில் விரும்பியதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி அல்லாஹ்வின் தூதரிடம் கூறப்பட்டால் அவர்கள் அவ்விரண்டில் இலேசானதையே அது பாவமான விஷயமாக இல்லாதிருக்கும் பட்சத்தில் எப்போதும் தேர்ந்தெடுப்பார்கள். அது பாவமான விஷயமாக இருந்தால் மக்களிலேயே அதிகமாக அதிலிருந்து வெகு தொலைவில் (விலகி) நிற்பார்கள்.

இறைத்தூதர்(ﷺ) அவர்கள், தமக்காக என்று எவரையும் பழிவாங்கியதில்லை. அல்லாஹ்வின் புனித(ச் சட்ட)ம் எதுவும் சீர்குலைக்கப்பட்டு, அதற்கு பதிலாக அல்லாஹ்வின் சார்பாகப் பழிவாங்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினாலே தவிர.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள்,புகாரி 3560

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

8

நபி(ﷺ) அவர்களின் உள்ளங்கையை விட மென்மையான பட்டையோ, (பூ வேலைப்பாடு செய்யப்பட்ட) தூய்மையான பட்டையோ நான் தொட்டதில்லை.

நபி(ﷺ) அவர்களின் (உடல்) மணத்தை விட சுகந்தமான ஒரு நறுமணத்தை நான் நுகர்ந்ததேயில்லை.

வேறுசில அறிவிப்புகளில் 'உடல் மணம்' என்பதற்கு பதிலாக 'வியர்வை' என்று இடம் பெற்றுள்ளது.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,புகாரி 3561

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

9

நபி(ﷺ) அவர்கள் திரைக்குள் இருக்கும் கன்னிப் பெண்ணை விடவும் அதிக வெட்கம் உடையவர்களாயிருந்தனர்.

ஷுஅபா(ரஹ்) இதே போன்றதை அறிவித்துவிட்டு, 'நபி(ﷺ) அவர்கள் எதையாவது வெறுத்தால், அது அவர்களின் முகத்தில் தெரிந்துவிடும்' என்று (அதிகப்படியாக) அறிவித்தார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஸயீத் அல் குத்ரீ (ரலி) அவர்கள்,புகாரி 3562

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

10

நபி(ﷺ) அவர்கள் எந்த உணவையும் ஒருபோதும் குறை கூறியதில்லை. அவர்கள் ஓர் உணவை விரும்பினால் உண்பார்கள், இல்லையென்றால்விட்டு விடுவார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 3563

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

11

நபி(ﷺ) அவர்கள் ஒரு விஷயத்தை பேசுகிறார்கள் என்றால், அதை (வார்த்தை வார்த்தையாக, எழுத்து எழுத்தாகக் கணக்கிட்டு) எண்ணக் கூடியவர் எண்ணியிருந்தால், ஒன்று விடாமல் எண்ணியிருக்கலாம். (அந்த அளவிற்கு நிறுத்தி நிதானமாக, தெளிவாகப் பேசி வந்தார்கள்.)

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள்,புகாரி 3567

நபி(ﷺ) அவர்களிடம் எது கேட்கப்பட்டாலும் ஒருபோதும் அவர்கள் 'இல்லை' என்று சொன்னதில்லை என ஜாபிர்(ரலி) கூறக் கேட்டேன்.

அறிவிப்பாளர்: ஜாபிர் (ரலி) அவர்கள்,புகாரி 6034

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

13

நான் நபி(ﷺ) அவர்களுக்குப் பத்து ஆண்டுகள் சேவகம் புரிந்தேன். (மனம் வேதனைப்படும்படி) என்னை 'ச்சீ' என்றோ, '(இதை) ஏன் செய்தாய் என்றோ, நீ (இப்படிச்) செய்திருக்கக் கூடாதா?' என்றோ அவர்கள் சொன்னதில்லை.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,புகாரி 6038

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

14

"தம் வீட்டாரிடம் இருக்கும்போது நபி(ﷺ) அவர்கள் என்ன செய்வார்கள்?' என்று நான் (அன்னை) ஆயிஷா(ரலி) அவர்களிடம் கேட்டேன். அவர்கள், "தம் வீட்டாருக்காக (வீட்டு) வேலைகளை நபி(ﷺ) அவர்கள் செய்துவந்தார்கள். தொழுகை (நேரம்) வந்துவிட்டால் தொழுகைக்காக எழுந்து (சென்று) விடுவார்கள்' என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர்: அஸ்வத் இப்னு யஸீத் (ரஹ்) அவர்கள்,புகாரி 6039

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

15

நபி(ﷺ) அவர்கள் ஒட்டகத்தின் மேல் ஒரு போர்வை (போன்ற அங்கி)யால் ஸஃபிய்யா(ரலி) அவர்களைச் சுற்றி திரை அமைத்தார்கள். பிறகு ஒட்டகத்தின் அருகில் அவர்கள் அமர்ந்தார்கள்.

ஸஃபிய்யா(ரலி), நபி(ﷺ) அவர்களின் முழங்கால் மீது தம் காலை வைத்து ஒட்டகத்தில் ஏறினார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,புகாரி 2235

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

16

மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு பெண் நபி(ﷺ) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே! எனக்குத் தங்களிடம் ஒரு தேவை உள்ளது. (ஒரு விஷயம் பற்றி கேட்க வேண்டும்)" என்று கூறினாள்.

அப்போது அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் , "இன்ன மனிதரின் தாயே! எந்தத் தெருவுக்கு நான் வரவேண்டும் என நீ விரும்புகிறாய்; சொல். உனது தேவையை நான் நிறைவேற்றி வைக்கிறேன்" என்று கூறிவிட்டு, அவள் தமது தேவையை முடித்துக் கொள்ளும் வரை (மக்கள் நடமாட்டமுள்ள ஒரு தெருவில்) அவளுடன் தனியாக(ப் பேசிக்கொண்டு) நின்றிருந்தார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,முஸ்லிம் 4648

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

17-A

(மக்கா வெற்றியின் போது) மக்ஸூமீ குலத்துப் பெண் ஒருத்தி (ஃபாத்திமா பின்த் அல் அஸ்வத்) திருட்டுக் குற்றம் செய்திருந்தாள். அவள் விஷயமாக குறைஷிகள் மிகவும் கவலைக்கு உள்ளாயினர்.

(மக்கா வெற்றியின் போது) மக்ஸூமீ குலத்துப் பெண் ஒருத்தி (ஃபாத்திமா பின்த் அல் அஸ்வத்) திருட்டுக் குற்றம் செய்திருந்தாள். அவள் விஷயமாக குறைஷிகள் மிகவும் கவலைக்கு உள்ளாயினர்.

(உஸாமா(ரலி) அவர்களிடம் பரிந்துரை செய்யும்படி அவர்கள் கேட்டுக் கொள்ள, அவ்வாறே) உஸாமா(ரலி) நபி(ﷺ) அவர்களிடம் (அவள் விஷயமாகப்) பேசினார்கள்.

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

17-B

அதற்கு இறைத்தூதர்(ﷺ) அவர்கள், "அல்லாஹ்வின் தண்டனைகளில் ஒரு தண்டனையின் விஷயத்திலா (அதைத் தளர்த்தும்படி என்னிடம்) நீ பரிந்துரை செய்கிறாய்' என்று (கோபத்துடன்) கேட்டுவிட்டு, பிறகு எழுந்து நின்று உரை நிகழ்த்தினார்கள்.

பிறகு (அவ்வுரையில்), "உங்களுக்கு முன்னிருந்தவர்கள், அழிக்கப்பட்டது எல்லாம் அவர்களில் உயர் குலத்தவன் திருடிவிட்டால் அவர்கள் அவனை (தண்டிக்காமல்)விட்டு வந்தார்கள். அவர்களில் பலவீனமான (பிரிவைச் சேர்ந்த)வன் திருடிவிட்டால் அவனுக்கு தண்டனையளித்து வந்தார்கள் என்பதால் தான்! அல்லாஹ்வின் மீதாணையாக! முஹம்மதின் மகள் ஃபாத்திமா திருடி விட்டிருந்தாலும் அவரின் கையையும் நான் துண்டித்திருப்பேன்' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள்,புகாரி 3475

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம் 18

நான் இறைத்தூதர்(ﷺ) அவர்களுடன் (அவர்களின் இல்லத்திற்குள்) நுழைந்தேன். அங்கு அவர்கள் ஒரு பாத்திரத்தில் பால் இருக்கக் கண்டார்கள். உடனே (என்னிடம்) "அபூ ஹிர்! திண்ணை வாசிகளிடம் சென்று, அவர்களை என்னிடம் அழைத்து வாருங்கள்" என்றார்கள். எனவே, நான் அவர்களிடம் சென்று அவர்களை அழைத்தேன். அவர்களும் (அழைப்பை ஏற்று) வந்து (இறைத்தூதர்(ஸல்) அவர்களின்) இல்லத்தினுள் நுழைய அனுமதி கேட்டார்கள். அப்போது அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது. பிறகு அவர்கள் நுழைந்தனர்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,முஸ்லிம் 4648

(ஒரு முறை) அனஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள் சிறுவர்களைக் கடந்து சென்றபோது அவர்களுக்கு சலாம் சொன்னார்கள். மேலும், நபி(ﷺ) அவர்கள் இவ்வாறுதான் செய்துவந்தார்கள்' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,புகாரி 6247

நபி(ﷺ) அவர்கள் ஏதாவது ஒரு வார்த்தை பேசினால் அது அவர்களிடமிருந்து நன்கு புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக மும்முறை அதைத் திரும்பக் கூறுவார்கள்.ஏதாவது ஒரு சமூகத்தாரிடம் சென்றால் மும்முறை ஸலாம் கூறுவார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,புகாரி 95

நபி(ﷺ) அவர்களின் துணைவியாரான ஆயிஷா(ரலி) அவர்கள் கூறினார்கள்.

நான் இறைத்தூதர்(ﷺ) அவர்களை உள்நாக்குத் தெரியும் அளவிற்குச் சிரிப்பவர்களாகக் கண்டதில்லை. அவர்கள் புன்னகைப்பவர்களாகவே இருந்தார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள்,புகாரி 4828

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

22

நபி(ﷺ) அவர்களை விடத்தொழுகையைச் சுருக்கமாகவும் (அதே சமயம்) பூரணமாகவும் தொழுகை நடத்தக் கூடிய வேறு எந்த இமாமின் பின்னாலும் நான் தொழுதது கிடையாது.

ஒரு குழந்தையின் அழுகுரலை அவர்கள் கேட்க நேர்ந்தால், அக்குழந்தையின் தாயாருக்குச் சஞ்சலம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் தொழுகையைச் சுருக்கமாகவே முடித்துக் கொள்வார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,புகாரி 708

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், "இறைவா! நான் ஒரு மனிதனே. ஆகவே, நான் முஸ்லிம்களில் எவரையேனும் ஏசியிருந்தால், அல்லது சபித்திருந்தால், அல்லது அடித்திருந்தால் அவற்றை அவருக்குப் பாவப் பரிகாரமாகவும் அருளாகவும் மாற்றிடுவாயாக!" என்று பிரார்த்தித்தார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 6781

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

24

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் தமது கையால் எதையும் எப்போதும் அடித்த தில்லை.எந்தப் பெண்ணையும் எந்த ஊழியரையும் அடித்ததில்லை. அல்லாஹ்வின் பாதையில் (போர் செய்யும்போதே) தவிர.

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் (சொல்லாலோ செயலாலோ) தம்மைப் புண்படுத்திய எவரையும் அவர்கள் எப்போதும் பழிவாங்கியதில்லை. இறைவனின் புனித(ச் சட்ட)ம் ஏதும் சீர்குலைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக இறைவனின் சார்பாக அவர்கள் நடவடிக்கை எடுத்தாலே தவிர (அப்போது மட்டுமே பழிவாங்குவார்கள்).

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 6195

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

25

துஃபைல் இப்னு அம்ர் அத்தவ்ஸீ(ரலி) அவர்களும் அவர்களின் தோழர்களும் நபி(ﷺ) அவர்களிடம் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! (எங்கள்) 'தவ்ஸ்' குலத்தார் மாறுசெய்து (இஸ்லாத்தை ஏற்க மறுத்து)விட்டார்கள். அவர்களுக்குக் தீங்கு நேரப் பிரார்த்தியுங்கள்' என்று கேட்டுக் கொண்டனர். அப்போது, 'தவ்ஸ் குலத்தார் அழியட்டும்' என்று கூறப்பட்டது.

நபி(ﷺ) அவர்கள், 'இறைவா! தவ்ஸ் குலத்தாரை நேர்வழியில் செலுத்துவாயாக! அவர்களை (இஸ்லாத்திற்குக்) கொண்டு வருவாயாக!' என்று பிரார்த்தித்தார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 2937

நபி(ﷺ) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் இணைவைப்பாளர் களுக்கெதிராக(ச் சாபமிட்டுப்) பிரார்த்தியுங்கள்" என்று கூறப்பட்டது.

அதற்கு நபி (ﷺ) அவர்கள், "நான் சாபமிடுபவனாக அனுப்பப்படவில்லை. நான் அருளாகவே அனுப்பப் பெற்றுள்ளேன்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 6778

ஒரு கிராமவாசி பள்ளிவாசலினுள் சிறுநீர் கழித்தார். அவரை நோக்கி நபித் தோழர்கள் (வேகத்துடன்) எழுந்தனர்.

அப்போது இறைத்தூதர்(ﷺ) அவர்கள், "(அவர் சிறுநீர் கழிப்பதை) இடை மறிக்காதீர்' என்று கூறிவிட்டுப் பிறகு ஒரு வாளியில் தண்ணீர் கொண்டு வரக் கூறினார்கள். பிறகு (தண்ணீர் கொண்டு வரப்பட்டு) அது சிறுநீர் மீது ஊற்றப்பட்டது.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,புகாரி 6025

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

28

யூதர்களில் ஒரு குழுவினர் இறைத்தூதர்(ﷺ) அவர்களிடம் வந்து, "அஸ்ஸாமு அலைக்கும்' (உங்களுக்கு மரணம் உண்டாகட்டும்) என்று (சற்றே மாற்றி சலாம்) கூறினர்.

அவர்கள் கூறியதைப் புரிந்துகொண்ட நான் அவர்களுக்கு "வ அலைக்கும் அஸ்ஸலாமு வல்லஅனா (அவ்வாறே உங்களின் மீது மரணமும் சாபமும் உண்டாகட்டும்)' என்றேன்.

அப்போது இறைத்தூதர்(ﷺ) அவர்கள் , "ஆயிஷா! நிதானம்! எல்லா விஷயங்களிலும் நளினத்தைக் கையாளுவதையே அல்லாஹ் விரும்புகிறான்' என்று கூறினார்கள்.

அப்போது நான், "இறைத்தூதர் அவர்களே! அவர்கள் சொன்னதை நீங்கள் கேட்கவில்லையா?' என்று கேட்டேன்.

அதற்கு நபி(ﷺ) அவர்கள், "நான்தான் "வ அலைக்கும்' (அவ்வாறே உங்களுக்கு உண்டாகட்டும்) என்று சொல்லிவிட்டேனே! (அதை நீ கவனிக்கவில்லையா?)' என்று கேட்டார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள்,புகாரி 6024

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களிடம் வந்து, "படைப்பினங்களிலேயே மிகவும் சிறந்தவரே!" என்று அழைத்தார்.

அப்போது அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் "அது இப்ராஹீம் (அலை) அவர்கள்தான்" என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள்,முஸ்லிம் 6287

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

30

நபி(ﷺ) அவர்கள் ஒரு மனிதருக்கு, குறிப்பிட்ட வயதுடைய ஒட்டகம் ஒன்றை (கடனாகப் பெற்றதைத் திரும்பிச் செலுத்தும் வகையில்) கொடுக்க வேண்டிய வகையில்) கொடுக்க வேண்டியிருந்தது. அதை அவர் (திரும்பிச் செலுத்தும்படி) கேட்டு வந்தார்.

நபி(ﷺ) அவர்கள் (தம் தோழர்களிடம்) "அவருக்கு அதைக் கொடுத்து விடுங்கள்' என்றார்கள். அந்த வயதுடைய ஒட்டகத்தைத் தேடிய போது. அதை விட அதிக வயதுடைய ஒட்டகத்தைத்தான் தோழர்கள் கண்டார்கள்' அதையே கொடுத்து விடுங்கள்' என்று இறைத்தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அதற்கு அம்மனிதர், "எனக்கு நீங்கள் நிறைவாகத் தந்து விட்டீர்கள். அல்லாஹ்வும் உங்களுக்கு நிறைவாகத் தருவான் என்று கூறினார். அப்போது நபி(ﷺ) அவர்கள், "அழகிய முறையில் திரும்பிச் செலுத்துபவரே உங்களில் சிறந்தவர்' என்றார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 2305

நபி (ﷺ) அவர்கள் ஏசுபவராகவோ, கெட்ட வார்த்தைகள் பேசுபவராகவோ சாபமிடுபவராகவோ இருக்கவில்லை. எங்களில் ஒருவரைக் கண்டிக்கும்போது கூட 'அவருக்கென்ன நேர்ந்தது? அவரின் நெற்றி மண்ணில் படட்டும்' என்றே கூறுவார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,புகாரி 6031

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

32

இறைத்தூதர் (ﷺ) அவர்கள் தடித்த விளிம்புகளைக் கொண்ட 'நஜ்ரான்' நாட்டு சால்வையொன்றை போர்த்தியிருக்க நான் அவர்களின்(பக்கம்) நடந்து சென்று கொண்டிருந்தேன்.

அப்போது அவர்களை கிராமவாசியொருவர் கண்டு அவர்களின் சால்வையால் அவர்களைக் கடுமையாக இழுத்தார். எந்த அளவிற்கென்றால், அவர் கடுமையாக இழுத்த காரணத்தால் சால்வை விளிம்பின் அடையாளம் இறைத்தூதர்(ﷺ) அவர்களின் தோளின் ஒரு பக்கத்தில் பதிந்திருப்பதைக் கண்டேன்.

பிறகு அந்தக் கிராமவாசி, 'முஹம்மதே! உங்களிடமிருக்கும் இறைவனின் செல்வத்திலிருந்து எனக்கும் கொடுக்கும்படி கட்டளையிடுங்கள்' என்றார்.

இறைத்தூதர்(ﷺ) அவர்கள் அவர் பக்கம் திரும்பிச் சிரித்தார்கள். அவருக்குக் கொடுக்கும்படி உத்தரவிட்டார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,புகாரி 5809

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம் 33

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

ஓர் ஆட்டின் விலாவை அல்லது காலை அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளும்படி நான் அழைக்கப்பட்டாலும் நான் ஏற்றுக் கொள்வேன். எனக்கு ஓர் ஆட்டின் விலா அல்லது கால் அன்பளிப்பாக தரப்பட்டாலும் சரி, நான் அதைப் பெற்றுக் கொள்வேன்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 2568

உஹுது மலை அளவிற்கு என்னிடம் தங்கம் இருந்தாலும் அதிலிருந்து சிறிது என்னிடம் (எஞ்சி) இருக்கும் நிலையில் என் மீது மூன்று நாள்கள் கழிவது கூட எனக்கு மகிழ்ச்சி அளிக்காது. கடனை அடைப்பதற்காக நான் (அதிலிருந்து) எடுத்து வைக்கும் சிறிதளவு (தங்கத்தைத்) தவிர.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 2389

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

35

அன்சாரிகளில் சிலர் நபி(ﷺ) அவர்களிடம் யாசித்தார்கள். நபி(ﷺ) அவர்களும் அவர்களுக்குக் கொடுத்தார்கள். பிறகும் நபியவர்களிடம் அவர்கள் யாசித்தார்கள் அப்போதும் அவர்களுக்குக் கொடுத்தார்கள். பிறகும் அவர்கள் கேட்க, நபி(ﷺ) அவர்கள் மீண்டும் அவர்களுக்குக் கொடுத்தார்கள்.

இவ்வாறு நபி(ﷺ) அவர்களிடம் இருந்தது அனைத்தும் தீர்ந்து போன பின் "என்னிடமுள்ள செல்வத்தை நான் உங்களுக்குத் தராமல் பதுக்கி வைக்கவே மாட்டேன். ஆயினும் யார் சுயமரியாதையைப் பேணிக் கொள்கிறானோ அவனை அல்லாஹ் சுயமரியாதையோடு வாழச் செய்வான். யார் பிறரிடம் தேவையற்றவனாக இருக்கிறானோ அல்லாஹ் அவனைத் தேவையற்றவனாக ஆக்குகிறான். யார் பொறுமையை மேற்கொள்ள முயற்சி செய்கிறானோ அவனை அல்லாஹ் பொறுமையாளனாக ஆக்குவான். மேலும், பொறுமையை விடச் சிறந்த, விசாலமான அருட்கொடை எவருக்கும் கொடுக்கப்படுவதில்லை' என்றார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஸஈதுல் குத்ரிய் (ரலி) அவர்கள்,புகாரி 1469

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

36-A

நான் அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னி ஆஸ்(ரலி) அவர்களைச் சந்தித்து, 'தவ்ராத்தில் நபி(ﷺ) அவர்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் வர்ணனையை எனக்குச் சொல்லுங்கள்!' என்றேன்.

அவர்கள், 'இதோ சொல்கிறேன்! அல்லாஹ்வின் மீது ஆணையாக! குர்ஆனில் கூறப்படும் அவர்களின் சில பண்புகள் தவ்ராத்திலும் கூறப்பட்டுள்ளன. "நபியே! நிச்சயமாக உம்மை சாட்சியாக அளிப்பவராகவும், நற்செய்தி கூறுபவராகவும், எச்சரிப்பவராகவும், எழுதப் படிக்கத் தெரியாத பாமரர்களின் பாதுகாவலராகவும் நாம் அனுப்பியிருக்கிறோம்! நீர் என்னுடைய அடிமையும் என்னுடைய தூதருமாவீர்! தம் எல்லாக் காரியங்களிலும் இறைவனையே நம்பி இருப்பவரென்று உமக்கு நான் பெயரிட்டுள்ளேன்!'

அதாஃ இப்னு யஸார் (ரஹ்) அவர்கள்,புகாரி 2125

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

36-B

(இவ்வாறெல்லாம் கூறிவிட்டு, நபி(ﷺ) அவர்களின் அடையாளங்களைக் கூறும் விதத்தில்) "அவர் கடின சித்தம் கொண்டவராகவோ, முரட்டுத்தனமுடையவராகவோ, கடைவீதிகளில் கத்திப் பேசி சச்சரவு செய்பவராகவோ இருக்க மாட்டார்! தீமைக்கு பதிலாகத் தீமையைச் செய்யமாட்டார். மாறாக, மன்னித்து கண்டு கொள்ளாமல்விட்டு விடுவார்! அவர் மூலம் வளைந்த மார்க்கத்தை நிமிர்த்தும் வரை அல்லாஹ் அவ(ரின் உயி)ரைக் கைப்பற்ற மாட்டான்! மக்கள் 'லாயிலாஹ இல்லல்லாஹு' என்று கூறுவார்கள்; அதன் மூலம் குருட்டுக் கண்களும், செவிட்டுக் காதுகளும், மூடப்பட்ட உள்ளங்களும் திறக்கப்படும்!' என்று அதில் அவர்களைக் குறித்து வர்ணிக்கப்பட்டுள்ளது!' என பதிலளித்தார்கள்.

அதாஃ இப்னு யஸார் (ரஹ்) அவர்கள்,புகாரி 2125

நான் இஸ்லாத்தைத் தழுவியதிலிருந்து (தம் வீட்டுக்குள் வரக் கூடாதென்று) நபி(ﷺ) அவர்கள் என்னைத் தடுத்ததில்லை. புன்முறுவலுடன் சிரித்தவர்களாகவே தவிர அவர்கள் என் முகத்தைப் பார்த்ததில்லை.

அறிவிப்பாளர்: ஜரீர் (ரலி) அவர்கள்,புகாரி 3035

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

38

எனக்குப் பல பெயர்கள் உண்டு.

நான் 'முஹம்மது' (புகழப்பட்டவர்) ஆவேன்.

இன்னும் நான் 'அஹ்மத்'

(இறைவனை அதிகம் புகழ்பவர்) ஆவேன்.

நான் 'மாஹீ' (அழிப்பவர்) ஆவேன்;

அல்லாஹ் என் மூலம் இறைமறுப்பை அழிப்பான்.

நான் 'ஹாஷிர்'

(ஒருங்கிணைப்பவர்) ஆவேன். என் தலைமையின்

கீழ் மக்கள் ஒருங்கிணைக்கப்படுவார்கள்.

நான் 'ஆகிப்'

(இறைத்தூதர்களில் இறுதியானவர்) ஆவேன்.

அறிவிப்பாளர்: ஜுபைர் இப்னு முத்இம் (ரலி) அவர்கள், புகாரி 4896

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

39

அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்களை விட அதிகமாகத் தம் குடும்பத்தாரை நேசிக்கும் ஒருவரை நான் பார்த்ததில்லை.

(அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்களின் குழந்தை) இப்ராஹீம் மதீனாவின் மேட்டுப் பாங்கான கிராமப்பகுதியில் பாலூட்டி வளர்க்கப்பட்டு வந்தார். (அங்கிருந்த குழந்தையைப் பார்ப்பதற்காக) அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் செல்லும் போது அவர்களுடன் நாங்களும் செல்வோம். அவர்கள் வீட்டுக்குள் நுழைவார்கள். அப்போது வீட்டுக்குள் புகை மூட்டப்பட்டிருக்கும். குழந்தையின் பால்குடித் தந்தை (அபூசைஃப்) கொல்லராக இருந்தார். அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் குழந்தையை வாங்கி முத்தமிட்டுவிட்டுத் திரும்புவார்கள்.

அறிவிப்பாளர் : அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், முஸ்லிம் 4635

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

40

நபி(ﷺ) அவர்கள் (தம் பேரர்) ஹசன் (ரலி) அவர்களை முத்தமிடுவதைக் கண்ட அக்ரஉ பின் ஹாபிஸ் (ரலி) அவர்கள், “எனக்குப் பத்து குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களில் எவரையும் நான் முத்தமிட்டதில்லை” என்று சொன்னார்கள்.

அதற்கு நபி(ﷺ) அவர்கள், “விஷயம் தெரியுமா? கருணை காட்டாதவன் கருணை காட்டப்படமாட்டான்” என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி) அவர்கள்,முஸ்லிம் 4637

# உலகத்தூதரின் நற்குணங்களை உலகிற்குச் சொல்வோம்

41

மதீனாவாசிகளின் (சாதாரண) அடிமைப் பெண்களில் ஒருத்தி கூட இறைத்தூதர்(ﷺ) அவர்களின் கையைப் பற்றிய வண்ணம் (தன் வாழ்க்கைத் தேவை நிமித்தமாக) தான் நாடிய இடத்திற்கு அவர்களை அழைத்துச் செல்ல முடியும். (அந்த அளவிற்கு மிக எளிமையானவர்களாகவும் நபி(ﷺ) அவர்கள் திகழ்ந்தார்கள்.)

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், புகாரி 6072